முடியுமோ, அப்படிக் கொண்டுவந்தால், நிச்சயமாக 15 மா கிட்டத் தட்ட 400, 500 கலம் நெல், அதே மாதிரி மற்ற தானியங்களேயும் விளேச்சல் செய்ய முடியும். ஒரு தனி மனிதனுக்கு கட்டுபடியாகக் கூடிய ஸீலிங் தான் அது. முற்றிலும் அந்த ஸீலிங் பொருத்தமானது என்று நான் கருதுகிறேன். 5 ஏக்கர் ஒரு தனி நபருக்கு என்று வைப் பதன்மூலம் 15 ஏக்கரில் 5 ஏக்கர் போக ஒரு தனி நபருக்கு 10 ஏக்கர் மிச்சப்படும். அதிலிருந்து சில லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விநியோகத்திற்குக் கிடைக்கும். பல லட்சக்கணக்கான குடும்பங்கள் நிச்சயமாக முன்னேற முடியும், மூச்சு விட்டு ஒரு அடிப்படை வாழ்க்கையை நடத்த முடியும், கலாசார முன்னேற்றம் அடைய முடியும், வாங்கும் சக்தியை அதிகரித்துக் கொள்ள முடியும். நாட்டி லுள்ள பொருளாதார அஸ்திவாரம் உந்தப்படக்கூடும். கோடிக் கணக்கான மக்களுடைய பொருளாதாரத்தில் மேம்பாடு ஏற்படும் நான் சொல்லக்கூடிய விதத்தில் ஒரு தனி நபருக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஸீலிங் வைத்தால். 5 ஏக்கர் ஸீலிங் வைப்பது என்பது மிகவும் சாலவும் சிறந்தது என்பது தான் என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, வியாக்கியானங்களில் பல்வேறு கோணல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வியாக்கியானங்களேப் பொறுத்த வரையில் ஒரு குடும்பம் என்பது ஒரு கணவன், மனேவி, 3 மைனர் குழந்தைகள் என்பது தான் நியாயமான குடும்பம் என்று ஒத்துக் கொள்ளக்கூடிய அடிப்படையில் அதை யாரும் மறுக்கமுடியாது. ஒரு கணவன், மனேவி, 3 மைனர் குழந்தைகள் என்பது நிச்சயமாக ஒரு நல்ல குடும்பமாக அமைய முடியும். இதை யாரும் நிச்சயமாக மறுக்க முடியாது என்பதைத் தெளிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு மேல் குடும்பத்தில் இருக்கக்கூடிய எல்லோரையும் சேர்த்துக்கொண்டு அதற்கு வேண்டிய ஸீலிங்கை வைத்துக்கொண் டிருப்பது என்பது, ஒரு குடும்பத்திற்கு 30 ஏக்கர், 40 ஏக்கர் என்று வைத்துக்கொள்வது என்பது நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார அமைப்பில், கிராமப் பொருளாதார அமைப்பில் நிச்சயம் சாத்தியமாகாது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள், மறுக்க முடியாது என்பது என்னுடைய தெளிவான அபிப்பிராயம், என்னுடைய துணிவு. அடிப்படையில் 5 ஏக்கர் தான் ஒரு நபருக்கு, ஒரு குடும்பத்திற்கு 15 ஏக்கர் தான், 5 பேருக்கு மேல் இருக்கக் கூடிய குடும்பத்தில் தலா ஒரு நபருக்கு ஒரு ஏக்கர் என்று சொல்லக்